## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

முதலாம் வருட/இரண்டாம் அரையாண்டு கலைமாணித் தேர்வு – 2015/2016
(மே 2018)

# HC 1212 Introduction to Hindu Civilization

நேரம் : 02 மணித்தியாலங்கள்

பகுதி–I இலிருந்து இரு வினாக்களையும் பகுதி–II இலிருந்து இரு வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி – I

01. தமிழ் நாட்டிலே சைவ சமயத்திற்குரிய அடிப்படைத் தத்துவமாக எழுந்த சித்தாந்தத்தை விளக்க எழுந்தவையே மெய்கண்ட சாத்திரங்கள் ஆகும். இதனை அடிப்படையாகக் கொண்டு மேல்வருவன பெறும் சிறப்பினை விளக்குக.

    (i) மெய்கண்ட சாத்திர நூல்கள் (05 புள்ளிகள்)

    (ii) உமாபதி சிவாச்சாரியாரின் திருவருட்பயன் (20 புள்ளிகள்)

02. "வேதாந்தப் பகுதிகள் அல்லது உபநிடதங்கள் முன்வைக்கும் பார்வைகளைப் பல ஞானிகள் பலவிதமாகப் பொருள் கொள்கிறார்கள்." இக்கருத்தினை மேல்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டு பரிசீலிக்குக.

    (i) மூவகை வேதாந்திகள் (05 புள்ளிகள்)

    (ii) சங்கரர் வேதாந்தம் (10 புள்ளிகள்)

    (iii) துவைத வேதாந்தம் (10 புள்ளிகள்)

03. மேல்வருவனவற்றுள் இரண்டினுக்குக் குறிப்புரை தருக.

    (i) தியானம்

    (ii) இந்து சமயத்தில் உளவியல்

    (iii) சுற்றுலாவும் வேலூர் பொற்கோயிலும்

    (iv) உபநிடதங்கள்

(2 x 12½ = 25 புள்ளிகள்)

## பகுதி – II

04. வேதாந்திரி மகரிஷியின் தற்சோதனை பற்றி மதிப்பிடுக.
(25 புள்ளிகள்)

2018

05. "அறம் அல்லது ஒழுக்க நெறி (morality) என்பது ஒருவர் சமூகத்தில் எவ்வாறு நடக்க வேண்டும் என்பது தொடர்பான பார்வைகளைக் குறிக்கின்றது." இதன் அடிப்படையில் இந்து இலக்கியங்களில் காணப்படும் அறம் பற்றிய சிந்தனைகளை ஆராய்க.
(25 புள்ளிகள்)

06. "தமிழர் வளர்த்த கலைகளுள் இசைக்கலை முதன்மையானது" ஆராய்க.
(25 புள்ளிகள்)

*****